www.Padasalai.Net www.CBSEtips.in

A

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## எட்டாம் வகுப்பு

நேரம் : 2.30 மணி

தமிழ்

மதிப்பெண்கள் : 100

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:- 7×1=7

1) நீலகேசி கூறும் நோயின் வகைகள் ______

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

2) காந்தியடிகள் ______ போற்ற வாழ்ந்தார்

அ) நிலம் ஆ) வையம் இ) களம் ஈ) வானம்

3) தொடக்க காலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்குத் ______ பயன்படுத்தினர்

அ) தாவரங்களை ஆ) விலங்குகளை இ) உலோகங்களை ஈ) மருந்துகளை

4) பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ______

அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்

5) முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் ______ யும் ஒட்டிவிடும்

அ) பாலனை ஆ) காலனை இ) ஆற்றலை ஈ) நலத்தை

6) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ______

அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) பாரதியார் ஈ) பெருஞ்சித்திரனார்

7) பறவைகள் ______ பறந்து செல்கின்றன

அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில் ஈ) நீரில்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக:- 4×1=4

8) எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ______

9) ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ______

10) செவ்வியந்தியர்கள் நிலத்தைத் ______ மதிக்கின்றனர்.

11) ஆசியஜோதி என்ற நூலை எழுதியவர் ______

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- 5×2=10

12) தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?

13) நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?

14) சான்றோர்க்கு அழகாவது எது?

15) விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?

16) புயல் காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?

17) ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?

18) ஓவிய எழுத்து என்றால் என்ன?

IV. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- 5×2=10

19) செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?

20) தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?

21) உலகம் எவற்றால் ஆனது?

22) எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?

23) வினைமுற்று என்றால் என்ன?

24) எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

25) முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com
Scanned with ACE Scanner

www.Padasalai.Net www.CBSEtips.in



V. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:- 5×3=15

26) நோய்கள் பெருகக் காரணம் என்ன?

27) வினையெச்சத்தின் வகைகளை விளக்குக?

28) உடல்நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

29) 'புலித்தோல் போர்த்திய பசு' என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?

30) தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?

31) நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.

32) நல்ல, படுத்து, எறிந்த, கடந்து, அழைத்த, பார்த்து - இவற்றில் பெயரெச்சம், வினையெச்சம் பிரித்து எழுதுக.

VI. பிழைகளின்றி மனப்பாடப் பாடல்களை எழுதுக:- 2+5=7

33) விலங்கொடு ............... எனத் தொடங்கும் குறட்பா.

34) உடலின் உறுதி ............... எனத் தொடங்கும் வருமுன்காப்போம் பாடல். (அல்லது)

35) வாழ்க நிரந்தரம் .......... எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்து.

VII. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:- 2×5=10

36) மூளையின் வலது இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.

37) ஏவல் வினைமுற்றுக்கும், வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

38) எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?

VIII. மொழிப்பயிற்சி வினாக்களுக்குத் தகுந்த விடைகளை எழுதுக:-

39) சொல்லுக்கு ஏற்ற பொருளை எழுதுக. 3×1=3

1) பிணி 2) வையம் 3) விசும்பு

40) கொடுக்கப்பட்டுள்ள சொற்களைச் சேர்த்தெழுதுக. 3×1=3

1) வானம் + அறிந்த 2) சீருக்கு + ஏற்ப 3) நெடுமை + தேர்

41) கொடுக்கப்பட்டுள்ளவற்றைப் பிரித்தெழுதுக. 3×1=3

1) இன்னோசை 2) நலமெல்லாம் 3) விழுந்ததங்கே

42) பழமொழிகளை நிறைவு செய்க 2×1=2

1) நோயற்ற வாழ்வே __________ 2) கூடி வாழ்ந்தால் __________

43) வினைமுற்றுக்குரிய வேர்ச்சொல்லை எழுதுக. 2×1=2

1) நடக்கிறது 2) பயின்றாள்

44) எவ்வகைத் தொடர் என எழுதுக. 2×1=2

1) காடு மிகவும் அழகானது. 2) அந்தோ! பூனையின் காலில் அடிபட்டுவிட்டதே!

45) உவமைத் தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க 2×1=2

1) உடலும் உயிரும் போல 2) கிணற்றுத் தவளை போல

46) சரியான மரபுச் சொற்களை எழுதுக 2×1=2

1) சேவல் கரையும் 2) மயில் அலறும்

47) கலைச்சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக. 2×1=2

1) Vowel 2) Disease

IX. ஏதேனும் ஒன்று மட்டும் எழுதுக:- 1×8=8

48) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

49) அ) ஓரெழுத்து ஒரு மொழிகள் இடம் பெறுமாறு ஐந்து தொடர்களை எழுதுக.

ஆ) தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்துச் சுருக்கி எழுதுக.

X. ஏதேனும் ஒன்று மட்டும் எழுதுக:- 1×8=8

50) 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

51) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

*******

Scanned with ACE Scanner

Kindly send me your study materials to padasalai.net@gmail.com